மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 02–ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 115/24
வா.சா.3

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: குணசேகரன் | தேதி : 02.03.26 |
| வயது : | த/பெ : சுந்தரலிங்கம் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>02.03.26 குறுக்கு விசாரணை</u>

1.எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். ஜெயகுமார், விஜயகுமார் ஆகியோர்தான் என்னை சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு அழைத்தனர் என்றால் சரிதான். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளனர் என்றால் அவர்கள் பெயரில் உள்ள இடத்தினை ராம்குமார் பெயரில் பட்டா வாங்கிவிட்டதாக வழக்கு போட்டுள்ளார். என்னுடைய குடியிருப்பு சென்னையில் உள்ள பாடி என்றால் சரிதான்.

2.நான் சென்னையில் 56 வருடங்களாக வசித்து வருகிறேன். இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை படித்து பார்க்கவில்லை. வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் மற்றும் புதிய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அதன் நீளம், அகலம் தெரியாது. மொத்த பரப்பு 4.5 செண்ட் ஆகும். அதற்கான ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.02 19:37:57 +0530

செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திற்கு யார் விபரங்கள் சொன்னார் என்றால் வழக்கறிஞர் தான் சொன்னார்.

3.உயில் ஆவணம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். உயில் ஆவணம் எந்த எந்த ஆவணங்களின் அடிப்படையில் எழுதப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயில் ஆவணத்தினை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் என் அத்தையின் மகன்கள் ஆவர். மாவடிப்பண்ணை ஊரில் நடந்த கோவில் திருவிழா, கல்யாண நிகழ்ச்சிகள், நல்லது கெட்டது போன்றவைகளுக்கு அடிக்கடி வந்துள்ளேனா என்றால் சிறு வயதில் வந்துள்ளேன்.

4.வழக்கு சொத்தின் அமைப்பு தெரியுமா என்றால் விஜயக்குமார் நடுவில் வீடு கட்டி உள்ளார். எந்த தேதியில் விஜயகுமர் வீடு கட்டினார் என்றால் 10 ஆண்டுகள் இருக்கும். அதன் கதவு எண் 28 ஆகும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாதிகள் சென்னையில் எத்தனை வருடம் குடியிருக்கிறார்கள் என்றால் 50 வருடத்திற்கு மேலே இருக்கும். வழக்கு சொத்தின் மத்தியில் 10 ஆண்டுகளுக்கு முன் விஜகுமார் வீடு கட்டியிருக்கிறார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5.துரைச்சாமி நாடார் என் அத்தையின் மாமனார். துரைச்சாமி நாடார் எனக்கு தாத்தா உறவுமுறை வேண்டும். அவர் இறந்த தேதி, மாதம், வருடம் தெரியாது. வாதிகள் நல்லது கெட்டது நிகழ்ச்சிகளுக்கு தாவா கிராமத்திற்கு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.02 19:38:01 +0530

வருவார்கள் என்றால் ஆம். வாதிகள் அய்யா வழிபாடு கோவிலுக்கு மாவடிப்பண்ணைக்கு அடிக்கடி வருவார்கள் என்றால் சரிதான். கோவில் விழாவில் கலந்து கொண்டவுடன் வாதிகள் ஊருக்கு சென்று விடுவார்கள் என்றால் 2, 3 நாள்கள் இருந்துவிட்டுதான் செல்வார்கள்.

6.நான் சொல்லியுள்ள எல்கைமால்களுக்கு ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ராம்குமார் எப்போது வீடு கட்டினார் என்று சரியாக தெரியாது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.02 19:38:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.